அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

# ஆண்டு 9

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

மொத்தப்புள்ளிகள்: 100
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்
20

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

1. நாட்டுப்புற இலக்கிய வடிவங்களுள் ஒன்று
   1. கவிதை
   2. திரைப்படம்
   3. பழமொழி
   4. சிறுகதை

2. பிறருக்கு உதவி செய்யும் ஆர்வத்தைத் தோன்றச் செய்வது
   1. அன்பு
   2. வீரம்
   3. பகை
   4. பொறாமை

3. தெரிநிலை வினைமுற்றாக அமையும் சொல்
   1. நடிகன்
   2. வாழ்க
   3. அழகு
   4. ஓடியது

4. நாட்டுக்காப்பியம் என்ற சிறப்புப் பெயர்பெற்றது
   1. மணிமேகலை
   2. சிலப்பதிகாரம்
   3. சீவகசிந்தாமணி
   4. வளையாபதி

5. முழவுகளுள் ஒன்று
   1. ஏழில்
   2. தண்ணுமை
   3. வீணை
   4. தாளம்

6. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' இப்பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல்
   1. சிலப்பதிகாரம்
   2. புறநானூறு
   3. திருக்குறள்
   4. நாலடியார்

7. ஈழம் முழுவதையும் ஒன்றிணைத்து ஒற்றையாட்சிக்கு உட்படுத்திய ஐரோப்பியர்
   1. போர்த்துக்கேயர்
   2. ஒல்லாந்தர்
   3. பிரித்தானியர்
   4. பிரான்சியர்

8. பாம்பும் கீரியும் போல என்ற உவமைத்தொடரின் பொருள்
   1. ஒற்றுமை
   2. பகை
   3. நட்பு
   4. விரைவு

9. குதிரை கனைக்கும். அதுபோல யானை
   1. உறுமும்
   2. பிளிறும்
   3. முழங்கும்
   4. கத்தும்

10. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கிய காலம்
   1. கி.பி. 1 - 3ஆம் நூற்றாண்டு
   2. கி.பி. 3 - 6ஆம் நூற்றாண்டு
   3. கி.பி. 6 - 9ஆம் நூற்றாண்டு
   4. கி.பி. 19 - 20ஆம் நூற்றாண்டு

11. கை + நூல் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. கைன்னூல்
   2. கைந்நூல்
   3. கைநூல்
   4. கைண்ணூல்

12. பணிவு இல்லாதவர் மனத்தில் தோன்றுவது
   1. அறம்
   2. துணிவு
   3. மகிழ்ச்சி
   4. செருக்கு

13. படிச்சம் என்பதன் எழுத்து வழக்குச் சொல்
   1. படிப்போம்
   2. படித்தோம்
   3. படிக்கிறோம்
   4. படித்தேன்

14. காதுகுத்துதல் என்னும் மரபுச்சொற்றொடரின் பொருள்
   1. எதிர்த்துப்பேசுதல்
   2. வெல்ல முயற்சித்தல்
   3. ஏமாற்றுதல்
   4. வெறுப்படைதல்

15. பல கலைகளின் கூட்டுக்கலை என அழைக்கப்படுவது
   1. இசை
   2. ஓவியம்
   3. பாட்டு
   4. ஆடல்

16. அடுக்குத் தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டு
1. நறநற
2. ஏற இறங்க
3. நடுநடுங்கி
4. பாடிப்பாடி

17. திசைச்சொல் அல்லாதது
1. பேப்பர்
2. பொன்
3. குசினி
4. சப்பாத்து

18. பலர் கூடிக் கைகொட்டி ஆடும் ஆடல்
1. கோலாட்டம்
2. காவடி
3. கும்மி
4. கரகம்

19. ஓடியது என்ற சொல்லின் பகுதி
1. ஓடிய
2. ஓடி
3. ஓடும்
4. ஓடு

20. சோழர் ஈழம் முழுவதையும் ஆட்சி செய்தபோது தலைநகராக இருந்தது
1. பொலநறுவை
2. அநுராதபுரம்
3. கண்டி
4. யாழ்ப்பாணம்

21. சேய், குழவி, மழலை என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. தோழன்
2. பெண்
3. சிறுமி
4. குழந்தை

22. காகம் மரத்தில் கூடு கட்டியது. இதில் வேற்றுமை உருபேற்ற சொல்
1. கூடு
2. காகம்
3. மரம்
4. கட்டியது

23. காடுகளை அழித்தலினால் ஏற்படும் விளைவு
1. காலநிலை மாற்றம்
2. பல்லினப் பண்பாடு
3. தொழில்நுட்ப வளர்ச்சி
4. அரசியல் பயன்கள்

1 2 3 4

24. எளிது என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. தாழ்வு
2. இலகு
3. முடிவு
4. கடினம்

25. போல என்பது
1. பெயர்ச்சொல்
2. இடைச்சொல்
3. உரிச்சொல்
4. வினைச்சொல்

26. உலகமயமாதலினால் ஏற்படும் நன்மைகளுள் ஒன்று
1. இயற்கை அழிவு
2. ஒழுக்கச் சீரழிவு
3. போர்களைத் தடுத்தல்
4. பொருள்களின் தரம் குறைவு

27. பிறவினைச் சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு
1. எழுதினார்
2. எழுதுவாள்
3. எழுதுவித்தான்
4. எழுதினர்

28. பிரித்தானியரை எதிர்த்துப் போராடிய வன்னி மன்னன்
1. கயிலாயவன்னியன்
2. பண்டாரவன்னியன்
3. கண்ணுச்சாமி
4. சங்கிலியன்

29. தமிழீழப் பகுதிகளுக்கென வெளியிடப்பட்ட நாணயங்களில் தமிழ் மொழியையும் சேர்த்த ஐரோப்பியர்
1. பிரித்தானியர்
2. போர்த்துக்கேயர்
3. ஒல்லாந்தர்
4. பறங்கியர்

30. அனைத்துக் கணினியிலும் பயன்படுத்தும் எழுத்துரு
1. ஆதமி
2. பாமினி
3. ஒருங்குறி
4. மயிலை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| | | | |

30 X 1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மாந்தவாழ்வு சிறக்கத் துணை செய்யும் வாழ்க்கைப் பண்புகளை எவ்வாறு அழைப்பர்?

2. ஐரோப்பியர் கீழைத்தேய நாடுகளுக்கு வந்ததற்கான காரணங்களுள் இரண்டு எழுதுக.

3. இயற்கையைப் பேண நாம் செய்யக் கூடிய செயற்பாடுகள் இரண்டு எழுதுக.

4. கன்னியா வெந்நீரூற்றுகளைப் பற்றிப் பாடிய ஈழத்துப் புலவர் யார்?

5. எழிலி தான் எழுதிய கட்டுரையை வகுப்பில் வாசித்துக் காட்டினாள். இச் சொல்லியத்தில் வரும் பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.

   பெயரெச்சம்:

   வினையெச்சம்:

6. உருவக அணிகளை உவமை அணிகளாக மாற்றி எழுதுக.

   அறிவுக்கடல்:

   தமிழ்த்தேன்:

7. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   செயப்படுபொருள் குன்றியவினை:

   ஏவல் பன்மை வினைமுற்று:

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. கலைகள்: ______________________________

2. ஒற்றுமை: ______________________________

3. வரலாறு: ______________________________

4. வெற்றி: ______________________________

5. வெள்ளம்: ______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தேசம் வளர்ப்போம் வாருங்கள்!
சிந்தை இணைந்தே சேருங்கள்!
நேசம் செழிக்கும் வழியெல்லாம்
தேசம் செழிக்கும் வழியாகும்
ஒருமைப் பாட்டால் நாட்டு நலம்
உயர்ந்து வளரும் நாள்தோறும்
ஒருமைப்பாடே நல்லவழி
ஒருமைப்பாடே வெல்லும் வழி
- ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

1. நாம் எதை வளர்க்க வேண்டும்?

______________________________

2. ஒருமைப் பாட்டால் வளர்வது எது?

______________________________

3. தேசம் செழிக்கும் வழியாக அமைவது எது?

______________________________

4. நாம் எப்படிச் சேர வேண்டும்?

______________________________

5. எமக்கு நல்ல வழி எதுவெனக் கவிஞர் சொல்கிறார்?

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

1. Nila writes essays well in Tamil.
2. The Jaffna Public Library was burnt down by the Sinhalese government.
3. Wildfires spread rapidly and caused devastation.
4. I went on an excursion with my classmates.
5. Seyon goes for walks with his parents every day.

**யேர்மனி:**

1. Nila kann gut einen Aufsatz in Tamil schreiben.
2. Die öffentliche Jaffna Bibliothek wurde von der singhalesischen Regierung niedergebrannt.
3. Weil der Waldbrand sich schnell ausbreitete, wurden viele Schäden verursacht.
4. Ich habe mit meinen Klassenkameraden einen Ausflug gemacht.
5. Seyon geht jeden Tag mit seinen Eltern spazieren.

**நோர்வே:**

1. Nila skriver gode tamilske artikler.
2. Det offentlige biblioteket i Jaffna ble brent ned av den singalesiske regjeringen.
3. Det ble masse ødeleggelser på grunn av en skogbrann som spredde seg fort.
4. Jeg dro på ekskursjon sammen med mine klassekamerater.
5. Seyon går på tur med foreldrene sine hver dag.

**இத்தாலி:**

1. Nila scrive bene articoli in Tamil.
2. La biblioteca pubblica di Jaffna fu bruciata dal governo cingalese.
3. La veloce propagazione dell' incendio boschivo causò devastazioni.
4. Io insieme ai miei compagni di classe sono andato in gita.
5. Seyon ogni giorni va in giro insieme ai genitori.

**நெதர்லாந்து:**

1. Nila kan goed een Tamils verhaal/artikel schrijven.
2. De algemene bibliotheek in Jaffna is door de Singalese overheid in brand gestoken.
3. Doordat de bosbrand snel verspreidde, ontstonden er veel vernietigingen.
4. Ik ging met mijn klasgenoten op schoolreis.
5. Seyon maakt iedere dag een rondje met zijn ouders.

## டென்மார்க்:

1. Nila er god til at skrive stil på tamilsk.
2. Jaffnas Offentlig bibliotek (Public Library) blev brændt ned af den singalesiske regering.
3. Skovbrande spredte sig hurtigt og forårsagede ødelæggelser.
4. Jeg tog på tur med mine klassekammerater.
5. Seyon går hver dag på tur med sine forældre.

## சுவீடன்:

1. Nila skriver bra uppsatser på tamil.
2. Jaffna bibliotek brändes ner av den singalesiska regeringen.
3. På grund av att skogsbranden spred sig snabbt orsakades förstörelse.
4. Jag åkte på utflykt med mina klasskamrater.
5. Seyon går på promenad med sina föräldrar varje dag.

## பின்லாந்து:

1. Nila kirjoittaa esseen hyvin tamiliksi.
2. Singalien hallitus poltti Jaffnan julkisen kirjaston.
3. Maastopalot leviävät nopeasti aiheuttaen tuhoa.
4. Minä kävin matkalla luokkakavereiden kanssa.
5. Seyon menee kävelylle vanhempien kanssa joka päivä.

## தமிழ்

1. ____________________________________________

____________________________________________

2. ____________________________________________

____________________________________________

3. ____________________________________________

____________________________________________

4. ____________________________________________

____________________________________________

5. ____________________________________________

____________________________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. மாந்த விழுமியங்கள்
2. கணினியும் தமிழும்
3. நான் செய்ய விரும்பும் பொதுப்பணி

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - பொதுப்பணியும், அதன் வகைகளும்
   - எனக்கு விருப்பமான பொதுப்பணியும் காரணமும்
   - செய்யும் முறையும் அதன் பயன்களும்
4. பருவகாலங்கள்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - நான்கு வகையான பருவகாலங்கள்
   - காலநிலையும் இயற்கைக் காட்சியும்
   - நான் விரும்பும் காலமும் காரணமும்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

### 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

உடல் நலத்திற்கும் மனமகிழ்விற்கும் விளையாட்டுகள் இன்றியமையாதவை. பழந்தமிழர் அவற்றை வீரத்திற்கும் திறன்களுக்குமான விளையாட்டுகள் என வகைப்படுத்தினர். பழந்தமிழரின் ஏறுதழுவுதல் என்ற வீர விளையாட்டு இன்றும் 'சல்லிக்கட்டு' என்ற பெயரில் தமிழகத்தில் விளையாடப்பட்டு வருகின்றது. கூரிய கொம்புடைய காளையுடன் சண்டையிட்டு வெல்வதே ஏறுதழுவுதல் ஆகும். தமிழரது மரபுவழி விளையாட்டுகளுள் கிட்டிப்புள், கிளித்தட்டு, சிலம்பம், வாரோட்டம் என்பவை பற்றி நாம் அறிந்துள்ளோம். இவற்றுள் கிளித்தட்டு, கிட்டிப்புள் ஆகிய விளையாட்டுகள் தொழிலோடு தொடர்புடையன. வயல்களில் விளைந்த பயிர்களை மேய வரும் விலங்குகளைக் கலைப்பதற்காக இவை ஆண்களால் மட்டுமே விளையாடப்பட்டன. இன்று இவ்விளையாட்டுகள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி, சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோராலும் விளையாடப்பட்டு வருகின்றன. இவற்றை விட ஈட்டியெறிதல், அம்பெய்தல் போன்றவையும் எமது விளையாட்டுகளே! இவை போரோடு தொடர்புடைய விளையாட்டுகளாகும். விளையாட்டுகள் நாகரிக வளர்ச்சியைக் காட்டுகின்றன.

1. விளையாட்டுகள் எதைக் காட்டுகின்றன?

______________________________

______________________________

2. ஏறுதழுவுதல் என்றால் என்ன?

______________________________

______________________________

3. மரபு விளையாட்டுகள் இரண்டு எழுதுக.

______________ ______________

4. ஈட்டியெறிதல், அம்பெய்தல் என்பன எதனுடன் தொடர்புடைய விளையாட்டுகள்?

______________________________

5. உடல்நலம், மனமகிழ்வு போன்றவற்றுக்கு இன்றியமையாதவை எவை?

______________________________

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

**2** விளம்பரத்தை வசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.




1. இந்த அங்காடி சுவிற்சர்லாந்தில் இருக்கிறது. ( )
2. இது புத்தகக் கடைக்கான ஒரு விளம்பரம். ( )
3. இங்கு பொருள்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன. ( )
4. நாம் பொருள்களை இணையவழியிலும் பெற்றுக் கொள்ளலாம். ( )
5. பொருள்கள் தாயகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ( )

5 X 1 = 5 புள்ளிகள்

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |